3588

தொகுதி- ருஎ :: பகுதி-உ — Vol. 57 :: No. 2

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1992
பிலவ—வைகாசி
MAY — 1961

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 17—5—61)

உள்ளுறை

1 இருபதாம் நூற்றாண்டின் உரை நடை வளர்ச்சி 33
இரா. நடராசன், எம். ஏ., எம். லிட்.,
மதுரைக் கல்லூரி, மதுரை.

2 மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு 41
புலவர் இரா. இளங்குமரன்,
மு. மு உயர்பள்ளி, திருப்பரங்குன்றம்

3 நமது வாழ்வு (மு. வைத்திலிங்கம்) 48

4 வழுக்காத்தல் 49
வித்துவான் கு. மா. திருநாவுக்கரசு

5 பொன் மொழிகள் (மு. வ.) 56

6 கையறுநிலை (அ. கி. பரந்தாமனார் எம். ஏ.) 58

7 மதிப்புரை 61

8 சங்கச் செய்திகள் 64

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L C.

2. திரு. சித்தாந்தகலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D. சென்னை.

4. திரு. பேராசிரியர். பி. சோநிமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருஎ Vol. 57	திருவள்ளுவர் ஆண்டு 1992 பிலவ — வைகாசி 1961 — May	பகுதி. உ No. 2

இருபதாம் நூற்றாண்டின் உரைநடை வளர்ச்சி

(இரா. நடராசன். எம்.ஏ. எம். லிட். மதுரைக் கல்லூரி, மதுரை.)

இவ்விருபதாம் நூற்றாண்டை உரைநடைக்காலம் என்று கொள்ளலாம். இந்நூற்றாண்டில் எழுந்த உரைநடை நூல்கள் பல்லாற்றானும் சிறந்துள்ளன. கி. பி. 1903-இல் இயற்கை யெய்திய சபாவதி நாவலர் அவர்களால் திராவிடப் பிரகாசிகை என்னும் நூலியற்றப்பட்டது. இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த பேராசிரியர் வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் (1873-1903) தமிழ்மொழி வரலாறு என்ற உரைநடை நூலை இயற்றினார். அவர்தம் நடை கற்றோர்க்குக் களிப்பூட்டும் தகையது; அவர்க்குப் பின்போந்தோர்க்கு வழிகாட்டியாய் அமைந்தது.

"வடமொழி தமிழ்நாட்டில் வெகுநாட்களாறும் இயங்கியும் அதற்குத் தமிழ்மொழியைத் தன் வழியிலே திருப்பிக் கொள்ளுதற்குற்ற ஆற்றல் இல்லாது போயிற்று. வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை யுணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்

தனர். இன்னும் அவர் தம் புத்திநலம் காட்டித் தமிழரசர் களிடம், அமைச்சர்களெனவும், மேலதிகாரப் பிரபுக்களெ னவும் அமைந்து கொண்டனர்; தமிழரிடத்திலிருந்த பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியும் முன்னரே அவற்றைத் தாமறிந்தனர் போலவும், வடமொழி யினின்றுமே தமிழிற்கவை வந்தன போலவும் காட்டினர். தமிழருட் சாமானிய சனங்கள் அவ்வாரியரது விருப்பத்திற் கேற்ப எவ்வளவிணங்கிய போதிலும், புலவராயினோர் அவர் களது திருத்தப்பாட்டிற்குப் பெரிதும் இணங்கினரல்லர்.''

அடுத்துக் கவிஞர் சுப்பிரமணியபாரதியாரும் சில உரை நடை நூல்களை எழுதினர். அவர்க்குப் பின்னர் போந்தவர் களுள் தமிழ் உரைநடையின் தந்தை எனப் பெயர் பெற்ற திரு. வி. க. அவர்களின் நடையின் மேன்மையினை நோக்கு வோம். அவரது நடை ஆற்றல் மிக்க அழகிய இனிய எளிய செம்மாந்த நடையாகும். அவர் நடை வேற்றுச்சொல் விர வாப் பெருமை பெற்றது. சிறு சிறு சொற்றொடர்களான் இயன்று, கருத்தினைக் கற்போர் மனங்கொளச் செய்யவல் லது. என்னே! என்னே! எண்ண! எண்ண! என்ற அடுக்குச் சொற்களை அன்னார் அடிக்கடிப் பெய்வது அவர் நடையினை மேலும் அழகுறச் செய்கிறது.

''தமிழ்நாடு தொன்மை வாய்ந்தது; மிக்க தொன்மை வாய்ந்தது அதன் தொன்மையைக் காலத்தால் அறுதியிட் டுக் காட்டல் இயலாது. அது நாவலந் தீவு தமிழ்நிலமாய்த் திகழ்ந்ததைக் கண்டது. இமயம் நீரிடை மூழ்கிக்கிடந்த தைக் கண்டது. தமிழ் நாட்டின் தொன்மை என்னே! என்னே! இன்னும் தொன்மையை வலியுறுத்தும் சான்று கள் பல உள்ளன. அவற்றுள் இரண்டொன்றை ஈண்டு பொறித்தல் சாலும்.''

அடுத்து மறைமலையடிகளின் மேன்மை மிக்க நடையினை நோக்குவோம். அன்னார் நடை பாமரர்க்கு எளிதில் புரியாதது. அன்னார் ஒரோவிடங்களில் உணர்ச்சி ததும்பும்படியான உரைநடை எழுதியுள்ளார். மிகவும் நீண்ட சொற்றொடர்களால் இயன்ற உரைநடைப்பகுதிகளும் அன்னார் நூல்களில் பல உள்ளன.

''பண்டைத் தமிழர்களே முதன் முதல் நாகரிகத்திற் சிறந்தவராய், ஏனைப் பழைய மக்கட்கெல்லாம் நாகரிகத்தைக் கற்பித்தவராய் இருக்கும் உண்மை வலிய சான்றுகளால் நிலைபெறுதல் கண்டு மனம் பொறாமல், அவரை ஆரியர்பால் நாகரிகங் கற்றவரென்று சொல்லி அவ்வெண்ணத்தை எப்படியாவது உண்டாக்கிவிட்டால், அவ்வெண்ணம் ஆராய்ச்சியில்லார்பால் பரவி, ஆரிய நாகரிகமே உலகநாகரிகத்திற்குக் காரணமாயிற்றென்னும் ஒரு போலிக் கொள்கை பரவிய வழக்காகி விடுமெனக் கருதிப் போலும் மேற்குறிப்பிட்ட வங்காள அறிஞர் அங்ஙனம் வலிய சான்றுகட்கெல்லாம் மாறு பேசினார்! அற்றேல், அவர் தமது கூற்றுக்குச் சான்று ஏதுமே காட்டிற்றிலரோ வெனின்; நீரில் அமிழ்ந்துவோன் ஒருவன் தன் அருகு மிதந்து செல்லும் ஒருவகைக்கோற்றுரும்பினைக் கைப்பற்றிய வாறு போல, அவ்வங்காள அறிஞரும் தாம் விழைந்ததனை நாட்டுதற்பொருட்டு இருக்குவேதத்தில் சொல்லப்பட்ட 'பணிகர் என்னும் ஆரியவணிக வகுப்பினரே சோழபாண்டியர்க்குக் கடன்மேற்செல்லும் வாணிக வாழ்க்கையினை கற்பித்தனர் எனவும், அவ்விருக்கு வேதத்தில் காணப்பட்ட 'மனா' என்னும் எடைப்பெயர் ஆரியமொழிச் சொல்லாதலின் அதனை வழங்கிய திராவிடரும் பாபிலோனியரும் பணிகர் என்னும் ஆரிய வணிகரிடமிருந்தே அதனைக் கற்றனரென்றும் கூறினர்.''

இனி, சோமசுந்தரபாரதியாரின் செம்மைசேர் நடையினை நோக்குவோம். இவரது நடை இனிய தமிழ்ச்சொற்களானே நடக்கின்றது; படிப்போர்க்கு இனியவோசை செறிந்து காணப்படுகின்றது.

"தொன்மை, சொற்சிறப்ப வளம், செய்யுட் சிறப்பு, நாற்றிட்பங்களில் முதுபெரு மொழியினத்திற் சேர்ந்து, பிறபல மொழிகளைப் போல வழக்கறியாமல், தளராது வளரும் உயிர்த்திறமும் இறவா இளமை வளமும் பெற்றுச் சாவாமொழி மூவாத் தமிழொன்றே.

தற்காலம் தமிழில் தலைசிறந்து நிலவுவது தொல்காப்பியர் நூலே. அது ஆரியப்பாணினிக்கும் தூரிய மேல்புல யவன அரித்தாட்டிலுக்கும் காலத்தால் முந்திய தொன்மை உடையது; பாணினியின் செறிவும், பதஞ்சலியின் திட்பமும், அரித்தாட்டிலின் தெளிவும், அவையனைத்திலுமில்லா வளமும் வனப்பும் அளவை நூன்முறையமைப்பும்பெற்றுச் செறிவும் தெளிவும் நெறியா நெகிழ்வும் நிரம்பி அமைந்தது."

நாவலர் வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார், வையாபுரிப்பிள்ளை ஆகியவர்களின் உரைநடை நூல்களும் உலவா உவகை ஊட்டும் பெற்றி பெற்றன. ஆயின் அவர்கள் நடைகளும் பெரும் புலவர்களாலேயே படித்தற்கு உரியன. இனி இப்பொழுதுள்ள உரைநடையாசிரியர்களில் சிறந்தவராகத் திகழும் சேதுப்பிள்ளை அவர்களின் நந்தா இன்பம் சேர் செந்தமிழ்நடையின் சிறப்பினை எண்ணுவோம். அவர் நடை செஞ்சொற்களால் இயல்வது; சிறு சொற்றொடர்களில் சிறந்த கொள்கைகளைக் கொண்டமைந்தது; எதுகை, மோனை முதலான பல நயங்கள் பொருந்திய இனிய வோசையும், எளிமையும்உடையது.

அவர் தம்முடைய உரைநடையினிடையே சிறந்த செய்யுள்களில் பயிலும் சிறந்த சொற்றொடர்களை நயந்தோன்ற அமைப்பது படித்து இன்புறற்குரியது. இத்தகைய செயல் இக்காலத்துள்ள வேறு உரைநடையாசிரியர்களாலும் கையாளப்படுவ தொன்றாகும்.

"பரிந்து தேடும் பணத்தைப் பார்த்து பார்த்து மகிழ்வதே பேரின்பம் என எண்ணி வாழும் ஏழை மாந்தர் எத்தனைபேர்? செல்வம் என்பது செல்லும் தன்மைத்து என்ற உண்மையை அறியாது. அதைக் கட்டிக்காக்க முயலும் கயவர் எத்தனை பேர்?

அசோக வனத்தில் சோகமே வடிவாய் அமைந்த அம் மங்கை, கணவனைத் திக்கு நோக்கித் தொழுவதும், மக்கி மடிந்து வீழ்வதும், விக்கி விம்மி அழுவதும் கண்டு இரக்க மற்ற அரக்கியரும் தளர்ந்து ஏங்குகின்றார்களே!"

இன்னும் உலவா உவகை ஊட்டும் உரைநடைகளை எழுதவல்ல பெருமக்கள் பலர் உள்ளனர். அவர்கள் அனைவரையும் பற்றி ஈண்டுக் குறிப்பிடுதல் எளிதன்று; விரிவஞ்சி விடுக்கின்றேன். இக்காலத்தில் நாடகம், சிறுகதை, புதினம் ஆகியவை உரைநடையில் எழுதப்படுவதினால் உரைநடை மிக்க ஆக்கமுறுகின்றது. உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உரைநடைக்கு மிக்க ஆர்வம் காட்டப்படுகின்றது. இவ்வாறு பல்லாற்றானும் உரைநடை மேன்மை பெறுகின்ற இக்காலத்தை உரைநடைக்காலமென்றல் மிகவும் பொருந்தும்.

இனி, உரைநடையில் காணப்படும் சில குறைகளைக் காண்போம். கி. பி. 17, 18-ஆம் நூற்றுண்டுகளில் சிலர் தமிழ் உரைநடையிலும், செய்யுளிலும் வடசொற்களை அதிக

அளவில் கலந்து எழுதத் தொடங்கினர்கள். அவ்வாறு அவர்கள் செய்தது வடசொற்கடலும் தென்றமிழ்க்கடலும் நிலை கண்டுணர்ந்தோம் என்ற ஆணவத்தினலோ அன்றி வேறெதனலோ அறியோம். அவ்வாறு வடசொற்கள் விரவிய நடை, மணியும் பவளமும் கலந்தாலொத்த சிறப்புடைத் தென்றெண்ணி அதற்கு மணிப்பிரவாள நடை எனப் பெயரீந்தனர். அத்தகைய அவல நடையினை 'ஆபாசநடை' என வெறுத்தார் பரிதிமாற் கலைஞர். அவ்வகையான நடை வர ஆரியருட் சிலரும், சைனருட் சிலரும் காரணமாவர் என்பதும் அவர் கருத்தாகும். அத்தகைய நடையில் யாரும் எவ்விதக் கருத்தினையும் புரிந்து கொள்ள முடியாமற் போவதோடு, தமிழின் தனித்தன்மையும், தூய்மையும் அதனுற் கெட்டுவிடும். காட்டாக, ஒருவன் 'சமூக சேவா சங்கம்' எனக்கூறுவானயின் கேட்பவன் மூன்று சொற்களும் வடமொழியினின்றும் வந்தன வாதலின் வடமொழியின் உதவியின்றித் தமிழ் தனித்தியங்காது போலும் எனமொழிவான். ஆயின், ''பொதுநலப்பணிக்கழகம்'' எனக்கூறுவது எத்துணை இன்பம் பயக்கின்றது. 'தேவர்கள்பூமாரிவர்ஷித்தார்கள்' என்பதைவிட, 'வானவர் மலர்மாரி பொழிந்தார்கள்' என்பதே நம்முடைய செவிகளுக்குத் தெவிட்டாத இன்பம் ஊட்டுகின்றது.

மற்றும் சில வாரவிதழ்களிலும், சிலர் நடையில் பேச்சுமுறையே பின்பற்றப்பட்டிருப்பதைக் காணலாம். நாம் பேசுவது போலவே எழுதுவது எட்டுணையும் பொருந்தாது. அது உரைநடையின் வளர்ச்சியைத் தடுக்கும் என்பது திண்ணம். காட்டாக, நாம் பேசும் பொழுது 'வர்றேன்' என்பது போல் எழுதும் பொழுது 'வர்றேன்' என்று எழுதாமல், 'வருகின்றேன்' என்று எழுதவேண்டும். நம்முடைய முயற்சிச் சுருக்கத்தாலும், பேச்சுக்கருவியில்

உள்ள சில குறைகளாலும் வருகின்ற உரையாடல் மொழியிலுள்ள வழுக்களைக் களையாமல் எழுத்து மொழியிலும் எழுதிவிட்டோமாயின்: அவ்வழுக்கள் எக்காலத்தும் நம் தமிழ்மொழியை விட்டகலா. ஆகவே நாம் பேசுவது போலவே எழுதுதல் கூடாது.

உரையாசிரியர்களைப் பின்பற்றுகின்றேம் எனக்கூறிக் கொண்டு திரிசொற்கள் பல பெய்து யாவர்க்கும் விளங்கா உரைநடை எழுதுதல் கூடாது. இதுகுறித்துப்பேராசிரியர் அனவரதம் விநாயகம் பிள்ளையின் கருத்தினைக்கூறி யமைதலே சாலும். ''நச்சினர்க்கினியர் முதலிய உரையாசிரியர்களையும் சிவஞான யோகிகளையும் பின்பற்றுவதாகச் சொல்விச் சாமானியர்க்கு விளங்காத வசனங்கள் எழுதிக்களிக்கின்ற இந்நாட் புலவர்களைப்பற்றி என்சொல்வது! பழைய நூல்களில் நடைவழுக்கள் காணப்படினும் அவற்றுள் பொதிந்திருக்கும் மாணிக்கங்களைக்காணும் பொருட்டுப் பொறுமை மேற்கொண்டு அவற்றைக் கற்றுணர்கின்றேம். அன்றியும், முற்காலத்தில், எளிமையின் உயர்வு அவர்களுக்குத் தெரியாதிருக்கலாம். செய்யுள் நடையோடு பழக்க மிகுதியால் வேறுவகை வசனம் எழுதுதல் அவர்களுக்கு அசாத்தியமான செய்கையாயும் இருந்திருக்கலாம். இன்னும் அவ்வுரைகளைக் கற்கப்புகுவோர் கீழ்க்கடையில் அநேக நூல்களைக் கற்றபின் அவற்றின் அருகே செல்வர். பழைய நூல்களைக் கற்பதற்குச் சாவகாசமும் சாமர்த்தியமும் குன்றிய இக்காலத்தில் எளியநடை எழுதுவதே முறையாகவும், முற்காலத்து நூல்களை மாதிரியாகக் கொண்டு 'உயர்நடை' எழுதுதல் அக்கிரமமன்றே? எளிய நடை எழுதுதல் நமக்குச் சாத்தியமன்று; யாம் எப்பொழுதும் பழைய நூல்களிலேயே பயின்றுள்ளோம் என்று கூறுவது வீண் கர்வமன்றி வேறென்ன?'

ஆகவே, கூடிய வரையில் வேற்றுமொழிச் சொற்களும் திரிசொற்களும், தொடர் எழுத்துக்களும், சந்திகளும் நிறைந்ததன்றாய், உணர்ச்சிக்கே முதலிடம் தாராமலும், மிக நீண்ட சொற்றொடர்கள் விரவாமலும் உரைநடை எழுதுதல் வேண்டும், மேலும், உரைநடையில் தன்முனைப்பு என்பது இருத்தல் கூடாது. (Ego'ism is the worst of all faults in Prose. clutton-Broch)

இறுதியாக, உரைநடை எவ்வாறிருத்தல் வேண்டும் என்பதைப் பார்ப்போம். ஆங்கில அறிஞர் கட்டன் புரூக் (Arthur clutton-Broch) என்பவர், செய்யுளின் உயிர்நிலை அன்பு; ஆனால் உரைநடையின் உயர்வு நீதியில் அடங்கியது. அந்நீதியானது உண்மையை அறிவதில் நாட்டமும், பொறுமையும், தன்னடக்கமும் தரவல்லது'' என்று கூறுகின்றார். நாம் உரைநடையைப் படிக்கும்பொழுது நம்மை மறந்து அதில் ஈடுபடவேண்டும் என்பதும் அன்னார் கருத்தாகும். (But the prose which interest us most and presudes us unconsciously to go on reading it.) உரைநடைக்கு உரிய உயரிய குணங்கள் ஒழுங்கும், ஏற்றத்தாழ்ச்சியின்மையும், உள்ளது உள்ளபடி உரைப்பதும் ஆகும் எனக் கூறுகின்றார் மாத்யூ ஆர்னால்டு. (The needful qualities of a fit prose are regularity uniformity, precision and balance.) ஆகவே யாவர்க்கும் எளிதின் விளங்கத்தக்கதாய், இலக்கண மரபு வழுக்கள் இல்லாததாய் உள்ள செந்தமிழ் நடையினை எழுதுவோமாக.

57 ஆம் தொகுதி 18 ஆம் பக்கத் தொடர்ச்சி

மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு

புலவர். இரா. இளங்குமரன்,
மு. மு. உயர்பள்ளி, திருப்பரங்குன்றம்.

அருள் செய்தலும், அறங்காத்தலும், கொடை புரிதலும், குடிதழுவலும், செங்கோல் வேந்தர்களது கடமைகளாம். இவற்றைக் கடமைகளாகக் கொண்டிருக்கு மாற்றைத் தமக்கும் பிறருக்கும் அறிவிக்குமாறே குடையையும் திகிரியையும் கருவிகளாகக் கொண்டனர்; கொடையையும் குடியோம்பலையும் குணங்களாகக் கொண்டனர்.

பொறுப்பு மிகக்கொண்டு கடனாற்றுவோர் வாழ்வில் களிப்புக்கு இடம் குறைவே. நேரிடைக் களிப்பும் அவர்கட்கு வாய்ப்பது இல்லை. தம் கடனாற்றலால் பிறர் வாழ்வில் இன்பம் மல்கிற்றேல் அவரின்பம் நோக்கி இவரின்பங் கொள்வர். அதுவே இவர்பெறும் இன்பமாம், அன்றிக் களியாட்டம் ஆடிக் கண்டவாறு பொழுதைக் கழித்துத் திரிவோர் உளரேல் அவர் அறவகையால் கடப்பாடு ஆற்றுதலைத் துறந்தோராதல் வேண்டும். ஆயின் மக்களை உயிரெனக் கருதும் மன்னவன் வாழ்வு வெளித்தோற்றத்திற்குப் பல்வேறு நலங்கள் கனிந்ததாக இலங்கினும் உள்நோக்கி அறிவார்க்கு இன்னல் பல பயப்பதே என்பது தெளிவாம். இதனாலே ''பொன்முடியன்று மன்னவன் சூடுவது; முண்முடியே'' என்று மொழிந்தோரும் உளர்.

இளங்கோவடிகளார் வடவாரியர் படைகடக்க நிற்கும் அண்ணன் வாயிலாக,

"மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்"

என்று திட்டவட்டமாய் உரைத்து, மழை உரிய காலத்தில் பெய்யா விட்டாலும், மக்கள் பல்வேறு துயர்கட்கு ஆட்பட்டாலும் உலகம் மன்னனையே பழிக்கும்; ஆகலின் மன்னவர் நன்குடிப் பிறத்தல் துன்பந் தருவதே அன்றி இன்பஞ் செய்வது இல்லை என்று வற்புறுத்துகிறார்.

செங்கோல் மன்னனுக்குத் தன்னுயிர் என ஒன்றில்லை. மக்களே அவன் உயிர். அவ்வாறாயின் மக்களாம் உயிர்க்குத் துயர் வருமாயின் அத்துயர் நேரிய மன்னனைக் கூரிய வாள் போல் வாட்டுதல் உறுதி.

மன்னுதல் என்னுஞ் சொல்லுக்கு நிலைபெறுதல் என்பது பொருளாம். உலகில் நிலைபெற்றவனே மன்னவன் ஆவான். அரசு ஏற்றவர் அனைவரும் அரசர் ஆகலாம். ஆனால் உலக ஏட்டில் மன்னினோர் அன்றி மற்றையோர் மன்னவர் ஆகார். இவ்வுலகம் நிலையிலாத் தன்மையுடையது. நிலையிலா உலகில் நிலைப்பது எளிதோ? எல்லோருக்கும் கூடுவதோ? சிலர்க்கே கைகூடும்! கூடுதற்கும் வழிவகை வேண்டும்.

நிலையிலா உலகில் நிலைக்க வேண்டுமாயின் புகழ்மிக்க செயல்களைச் செய்தாக வேண்டும். புகழ் ஒன்றே அழியாதது. "ஒன்றா உலகத்துயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்றில்" என்றார் அறநெறி அண்ணல். "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந்

தனர்'' என்றூர் புறநானூற்றுப் புலவர். புகழால் நிலைக்கு மொன்றே புவியாள்வோர் கடனும்.

புகழ்க் கோவிலுக்குப் புகுவாயில்கள் எத்துணை? ஒன்று இரண்டா? பலப்பல. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை நான்காம். அவை கொடை, அளி, செங்கோல், குடியோம்பல் என்பவை.

''அடுக்கிய மூவுலகும் கேட்குமே, கொடுத்தார் எனப் படுஞ் சொல்' என்று கொடைச் சிறப்பை எடுத்துரைக்கின் றது நாலடி. ''பொருள் அற்றூர் அப்பொருளை முயற்சியால் மீண்டும் பெறக்கூடும்; ஆனால் அருள் அற்றூர்? அருளை மட் டுமோ அற்றூர்? அனைத்தும் அற்றூர்'' என்கின்றது குறள். ''கொடும்புலி வாழும் காட்டினும் கொடிது கொடுங்கோல் மன்னர் வாழும் நாடு'' என்று கூறிச் செங்கோலின் இன்றி யமையாமையை வற்புறுத்துகின்றது பிற்கால நூல். ''மன்னவ! வெயில் மறைக்குமாறு பிடிக்கப்பெற்றதோ நின் வெண்குடை? குடிகளைக் காத்தற்காக அன்றோ எடுக் கப் பட்டது'' என்று பன்னுகின்றது தொன்மை நூல். இவ் வனைத்தையும் இறைமாட்சியிலே,

> ''கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
> உடையானும் வேந்தர்க் கொளி''

என்று தொகுத்துரைக்கின்றூர் பொய்யில் புலவர். கண்ணு கிய உறுப்பு இருந்தும் அதனிடை ஒளிவரப் பெறூர் கண் ணுடையர் ஆகார். அதுபோல் அரசப் பொறுப்பு இருந்தும் இந்நான்கு பண்புகளும் இல்லார் அரசர் ஆகார்; உடையரே அரசர்; அரசருள் ஒளியுடைய (புகழுடைய) அரசர். ஆக லின் தகை மாண்ட புகழ்க் கோவிலுக்குச் செல்லும் வகை மாண்ட வாயில்கள் பலவற்றுள்ளும் கொடையளி செங்

கோல் குடியோம்பல் என்னும் நான்கும் நற்கலை கவினிய பொற்புறு கோபுர வாயில்கள் எனல்தகும். இனி, இதற்கும் சிலப்பதிகார மங்கல வாழ்த்திற்கும் உரிய தொடர் பென்னை எனில் காண்போம்.

''முடிகெழுவேந்தர் மூவர்க்குமுரிய தொடர்நிலைக் காவியத்தை அடிகள் பாடவேண்டு'' மென்ற தண்டமிழ்ச் சாத்தன் வேண்டிக் கொண்டதற்கு ஏற்பச் சிலம்பு பாடும் சேரர் வழிவரும் அடிகள் வேந்தருக்கு ஒளியாம் வழிகளைத் தெளிய உரைத்துப் போதுகின்ருர். அவர் தம் காவியத்தில் பல இடங்களில் அவ்வாறு உரைக்கினும், தலையாய இடம் மங்கல வாழ்த்தாகவே புலப்படுகின்றது.

"யாம் திங்களைப் போற்றுவேம் - சோழனது வெண் குடை போன்று தண்ணளி செய்தலால்; யாம் ஞாயிறு போற்றுவேம்- சோழனது திகிரிபோல் (சக்கரம்) மேரு மலையை வலஞ்சுற்றி வருதலால்; யாம் மாமழையைப் போற்றுவேம்-சோழன் அருள்போல் பொழிந்து வளம் பெருக்குதலால்; யாம் பூம்புகார் போற்றுவேம்–சோழன் குலத்துடன் தோன்றி உயர்ந்து விளங்குதலால்; என்பதனை,

''திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்,

''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

''மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்.

"பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்."

என்று இசைநலம் பொலியப் பாடுகின்றார் அடிகள். இப் பாடல்களிலே திங்களால் குடிக்கு நிழலாம்அளியும், ஞாயிற் றால் செங்கோலாம் ஆண்மையும், மழையால் வளஞ்சுரக்கும் கொடையும், பூம்புகாரால் குடியோம்பலும் குறிக்கப் பெற் றமை ஊன்றி உணர்வார்க்குத் தெளிவாகாமற் போகா,

அரசர்க்கென்று அறநூல் வகுப்பனவற்றையே தாமும் கூறுவான் எடுத்துக்கொண்ட அடிகள் நூலின் தொடக்கப் பகுதியிலேயே இயற்கை வாழ்த்துரைக்கு முகத்தான் இவற்றை இனிதின் ஓதுகின்றார். தொடக்கமும் முடிவும் எவருள்ளத்தையும் எளிதில் ஈர்த்து நிலைபெறுத்தும் பெற்றி கொண்டிலங்குவனவாம். ஆதலின் அரசநெறிமுறை யறைந்து நூல் தொடங்கும் அடிகள் மாந்தர் நல்வாழ்வுக் குரியனவாம், பொதுவறங்களை விரித்துக் கூறும் வரந்தரு காதையுடன் காப்பியத்தை முடிக்கின்றார்.

மங்கல வாழ்த்துப் பகுதியில் கூறும் குறிப்புரைகளை நூலகத்து விரித்தும் விளக்கியும் செல்வது அடிகட்கு இயல் பாதலை நூலினை மேற்போக்காக நோக்குவோரும் உணர்வர் என்பது ஒருதலை.

திங்களை வெண்கொற்றக்குடையுடன் இணைத்த அடிகள் "தண்மதி யன்ன தமனிய வெண்குடை" (28 : 1-2) என்று வடிவுக்கும், "மண்குளிரச் செய்யும் தண்குடை" (19 : 21) என்று பண்புக்கும் ஒப்புமை காட்டியுள்ளார்.

ஞாயிற்றைச் செங்கோல் சிறக்கச் செய்யும் அறத் திகிரியுடன் ஒப்பிட்டுக் காட்டும் அடிகள் "விரிகதிர் பரப்பி

உலகமுழு தாண்ட ஒரு தனித் திகிரி உரவோன்" (4 : 1-2) என்று வடிவுக்கும், "பொற்கோட்டுமைய தா எப்பாலும், செருமிகு சினவேற் செம்பியன் ஒருதனியாழி" என்று தொழிலுக்கும் உவமை காட்டியுள்ளார்.

மழையினைக் கொடையுடன் ஒப்பிடும் அடிகள், சோழன் கொடைச் சிறப்பையும், சேரன் கொடைமாண்பையும் கேட்போர் நயப்பும் வியப்பும் ஒருங்கெய்தக் கூறுவதே அன்றி, "மன்னவர் பின்னோர்" என்று குறிக்கப்படும் வணிகருள் உயர்ந்தோங்கிய மாநாய்கனை "மாகவான் நிகர்வண்கையன்" என்றும், கோவலனைச் "செம்பொன் மாரிகொள்கையிற் பொழிந்தோன்" (15 : 41) என்றும் கூறுகின்றார்.

குலத்தோடோங்கிப் பரந்தொழுகும் நிலச்சிறப்பினைக் கூறும் அடிகள் "பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய, பொதுவறு சிறப்பிற் புகார்" (1:15-6) என்றும், "பதியெழு வறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர் (15 : 5-6) என்றும் குறிப்பிடுகின்றார்.

இவற்றை நோக்குங்கால் திங்களும், ஞாயிறும், மழையும், மண்ணும் தந்தொழில் திரியாத் தகைமையவாக் கடனாற்றினும் கொடையளி செங்கோல் குடியோம்பல் ஆகிய நான்கும் பேணாத அரசும், ஆட்சியும் கேடுபயப்பன வன்றி நன்மை பயவா என்றும், கோன் நிலைதிரியின் கோல் நிலை திரிந்து கோள் நிலையும் திரியும் என்றும், ஆள்வோர் செம்மையால்தான் ஆட்சிக்கு உட்பட்டோருக்கு நலம் விளையும் என்றும் அடிகள் உணர்த்துகின்றார் என்றுதல் வேண்டும். அரசியல் பிழைத்தோரை அறம் கூற்றாக இருந்து மடியச் செய்யும் என்பது அடிகள் நூல்பாடுவான் புகுவித்த முப்பெருங் காரணங்களுள் ஒன்றன்றோ! இத்தகைய அடிகள் நூலின் தொடக்கத்திலேயே "அறநெறி முதற்றே

அரசின் கொற்றம்'' என்று எண்ணுமாறு செய்வித்தல் ஏற்புடையதே என்று அறியலாம். ஆகலின் மங்கலவாழ்த்து, மன்னர் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளைவாழ்த்து முறையால் கூறும் பகுதி என்பது விளக்கமாகும்.

அடிகள் அறத்தை உயிரெனக் கொண்டவர்; அறத்தின் வழியே அரசியல் இயங்க வேண்டும் என்று கருதுபவர்; அவ்வாறு இயங்கினால் மாந்தரும் அறநெறிவழியே செல்வர் என்னும் அசையா உறுதி உடையவர்; அறத்தை நிலை பெறுத்துமாறும் மறத்தைக் கடிந்து ஒதுக்குமாறும் செய்தற்கு இலக்கியமே உயரிய கருவி என்று தெளிந்தவர். இவற்றுக்கு ஏற்ப அறவாழ்த்துப் பாடி நூலைத் தொடங்குகின்றார்.

''கோள் நிலை தவறாது! அப்படியே ஒரோர் வேளை அது தவறு படினும் ''கோன்நிலை தவறவே கூடாது. தவறுமாறு நேரின் குற்றமற்ற கோவலன் போல்வோர் கொலைக்களம் குறுகி மடிவர் என்று எதிர்கால உலகம் உணரவேண்டும்'' என்று அறநெறி தவறியது பற்றி விவரிக்கும் காப்பியத்தின் தொடக்கத்தில் அறநெறியை அழகுபெற வைக்கின்றார் அடிகள்! உணர்வார்க்கு இன்பம் பயவாமற் போகாது அடிகளின் மங்கல வாழ்த்து!)

நமது வாழ்வு!

[மு. வைத்திலிங்கம்]

1 உலகோ ரெமதே யென்னும் உயர்நூ லிதுவே யென்னும்
புலவோ ரிதுவே மறையாய்ப் பயில்வோம் மறவோ மென்னும்
நிலமாள் தலைவன் னறமாய் நினைவே னிதையே யென்னும்
குலமே பொலியுந் திருவாம் குறளே குறளே யுணர்வாம்!

2 வளமார் தமிழி னெழிலே விழியே யொளியே யிஃதாம்
உளமே தூய்மை யுடையா ருயிர்தா னிதுவே யென்னும்
வளமே நிலைய ய் வாழ்வில் விழைவோர் நெறியா மென்னும்!
களமே புகுவார் கையிற் றுணையாய்க் கொடுபோ மென்னும்

3 பொள்கூ றமைச்சோ தமக்கே படைத்தான் புலவன் னென்னும்
மருள்தீர் சமயப் பெரியோர் மறையா மெமக்கே யென்னும்
இருள்தீர் கணக்கன் னெறியே யிதுதா னெமக்கே யென்னும்
பொருள்காண் முனைவோர் திறமாய் பொருள்றா லிதுவே யென்னும்!

4 உழவோர் தமக்கே புவியில் வரைந்தா னிதையே யென்னும்
அழவோ விழவோ வென்பா ஏரிதின் துணையா மென்னும்
முழவாய் முழங்குந் தொழிலில் முயல்வார் தம்முள் ளென்றும்
பழமை படர்ந்தே யிடிவார் பெயர்ந்தே யெழுவார் பொலிவார்!

5 குவையா யின்பம் வாழ்விற் காண்போ மென்பார் தமக்கே
சுவையாய் நெறியாய்க் காதல் சொல்லு மிதுவே யென்னும்
அவையோர் புகழும் நாவின் றிருவார் தமதே யென்னும்
எவையும் விழைவார் விழைவே யெய்தும் நலமே யென்னும்!

6 கற்பின் திறமே கூறும் காதல் நலமே தாரும்
பொற்பின் நலமே புகலும் பரிவி னிதமே பேசும்
கற்பார் மேன்மை கழறும் கடியும் தீயோர் நட்பே
எற்றும் குறையே யின்றி யாவு மொழிந்தே திகழும்!

7 பொதுமைப் பண்பே நினைவார் பொதுநூ லிதுவே யென்னும்
புதுமை வேண்டு மிளையார் பெறுவா ரிதுவே மகிழ்வார்
முதுமை யறிவின் திருவான் மொழிந்தா னுலகே கொள்ள
அதுவே குறளாம் குறளாம் அறிவீர் நமக்கே வாழ்வாம்!

56 ஆம் தோகுதி 344 ஆம் பக்கத் தொடர்ச்சி

சொல்–விளக்கம் 2.

வழுக்கரத்தல்

[வித்துவான் கு. மா. திருநாவுக்கரசு]

முன்னிதழில் திணைவழுக்காத்தலைப் பற்றி விரிவாக ஆராய்ந்தோம், இனி, பால் வழுக்காத்தலைப்பற்றி ஆராய் வோம்.

(1) பால் வழாநிலை

(அ) பால்வழு என்பது ஒருபாற்சொல் ஏனைப்பாற் சொல்லோடு சேர்ந்து வருவது. அவன் என்னும் ஆண் பாற்சொல் வந்தாள் என்னும் பெண்பாற் சொல்லோடு கூடி வருதல் வழுவாகும். இம் முறையில் பால்வழு வாராதவாறு சொற்களைத் தொடர்ப்படுத்தியமைக்க வேண்டும் என்பதை

" வினையிற் றேன்றும் பாலறிகிளவியும்
பெயரிற் றேன்றும் பாலறிகிளவியும்
மயங்கல் கூடா தம்மரபினவே (11)

என்ற நூற்பாவினுல் தெரிவிக்கின்ருர் தொல்காப்பியர்.

(ஆ) எண் ஒருமைக்குரிய சொற்கள்

மேலே கூறியபடி எல்லாப்பாற்சொற்களும் வழுவாமல் வரவேண்டும் எனப் பொதுவாகக் கூறியதோடு, சிறப்பாக, எண்ணுப் பெயர்களில் ஒருமை, பன்மை குறிக்குஞ் சொற் களை எவ்வாறு வழங்க வேண்டும் என்பதையும் தெளிவாகக் கூறி வழுக்காக்கின்ருர்.

உயர்திணையில் ஒருமை யெண்ணைக்குறிக்கும்
ஆண்பாற்சொல் = ஒருவன்
உயர்திணையில் ,, பெண்பாற்சொல் = ஒருத்தி
உயர்திணையில் ஆண், பெண் என்னும் இருபாற்குமுரிய பொதுச் சொல் } = ஒருவர்

எனவே, உயர்திணையில் ஒருமையெண்ணையுங் குறித்து, ஆண், பெண் என்னும் இருபாற்கும் பொதுவாக வரும் சொல் 'ஒருவர்' என்பது அறியப்படும். இதனை, '**ஒருமை யெண்ணின் பொதுப் பிரியாப்பாற்சொல்**' என்பர். இனி, ஒருமையெண்ணையும் ஆண்பாலையுமட்டும் உணர்த்துஞ் சொல் 'ஒருவன்' என்பதும், ஒருமை யெண்ணையும் பெண் பாலையுமட்டும் உணர்த்துஞ் சொல் 'ஒருத்தி' என்பதுமாகிய இவற்றை '**ஒருமை யெண்ணின் பொதுப்பிரிபாற்சொல்**' என்பர். ஆண் பெண் என்னும் இருபாற்கும் பொதுவாக நில்லாது பிரிந்து, ஒருமை யெண்ணுக்குரியவாய், ஆண்பாலை அல்லது பெண்பாலை மட்டும் குறிப்பதால் இவற்றை 'ஒருமை யெண்ணின் பொதுப் பிரிபாற் சொல்' எனக்குறி யிட்டாளுவர்.

ஒருமை யெண்ணின் பொதுப் பிரிபாற் சொல்லாகிய ஒருவன், ஒருத்தி என்பனவற்றில் பாலுணர்த்துவன அன்விகுதியும், இகர விகுதியுமாம். பாலுணர்த்தும் விகுதி களாகிய இவ்விரண்டும் எண்ணுப் பெயரோடு வரும்போது ஒருமை யெண்ணுப் பெயரோடு வருமே யன்றி, இரண்டு முதலிய எண்ணுப் பெயர்களோடு வாரா. அஃதாவது, ஒருவன், ஒருத்தி என வருமேயன்றி, இருவன், இருத்தி என வாரா என்றறிக.

"ஒருமை யெண்ணின் பொதுப் பிரிபாற்சொல்
ஒருமைக்கல்லது எண்ணுமுறை நில்லாது" (44)

பொதுப் பிரிபாற்சொல்லுக்கு இவ்வாறு விதிவகுக்கவே பொதுப் பிரியாப்பாற்சொல் எவ்வாறு வரும்? எனின், பொதுப் பிரியாப்பாற்சொல்லில் உள்ள விகுதி 'அர்' என்பது. 'அர்' என்னும் விகுதி ஒருமை யெண்ணுப் பெயரில், 'ஒருவர்' என வருவதோடு, இரண்டு முதலிய எண்ணுப் பெயர்களில் இருவர், மூவர், நால்வர் எனவும் வரும் என்றறிக.

இதனால், ஆண்பாலை யுணர்த்தும் 'அன்' விகுதியும், பெண்பாலை யுணர்த்தும் இகரவிகுதியும் ஒருமை யெண்ணொடு மட்டுமே வரும் என்றும், இரண்டு முதலிய, எண்ணுப் பெயர்களொடுவாரா என்றும், இருபாற்கும் பொதுவாகிய 'அர்' விகுதி எல்லா எண்ணுப் பெயர்களோடும் வரும் என்றும் கூறிப் பால்வழுக்காத்தலையறிக.

அன், இ என்னும் இரண்டு விகுதிகளே யன்றி, 'ஏன்' என்னும் தன்மை விகுதியும், 'ஐ' என்னும் முன்னிலை விகுதியும் இவ்வாறே ஒருவேன், ஒருவை என ஒருமை யெண்ணொடு வருமே யன்றி. இருமை முதலிய எண்களோடுவாரா என்பதையும் அறிக.*

'ஒருவர் என்பது பற்றி விளக்கம்.

'ஒருவர்' என்பது பொதுப் பிரியாப்பாற்சொல் என முன் கூறப்பட்டது. இதில் பகுதி ஒருமையைக் குறிக்க விகுதி இருபாற்கும் பொதுவென்ற நிலையில் பலர்பாலைக் குறிக்கின்றது. எனவே ஒருமையும் பன்மையும் சேர்ந்து வந்தது வழுவன்றோ? எனின், அதனை வழுவமைதியாகக் கொள்க என்று தனி விதிவகுக்கின்றார்.
பெயரியலில்,

*இஃது ஒன்றெனமுடித்தலாற் கொள்ளப்பட்டது.

"ஒருவரேன்னும் பெயர் நிலைக்கிளவி
இருபாற்கு முரித்தே தெரியுங்காலை" (191) என்றும்
"தன்மை சுட்டின் பன்மைக்கேற்கும்" (192) என்றும்

கூறி இதனை வழுவமைதியாகக் கொள்ளவைக்கின்றார். ஒருவர் என்பது முப்பாலுள் ஒருபாலைக் குறிக்காது ஒருவன், ஒருத்தி என்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும் என்பதும், அஃது ஒருமைப் பெயராயினும், "ஒருவர் வந்தார்", 'ஒருவரவர்' எனப் பலர்பாற் சொல்லோடு தொடர்ந்து வரும் என்பதும் பெயரியல் நூற்பாக்களால் உணர்த்தப் பட்டன என்றறிக.

(இ) 'பேடி' என்னும் சொல் அமையும் வகை

'உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே' என்பது இலக்கணம். அம்முறையில் பேடி முழு ஆணாகவோ பெண்ணாகவோ இல்லாமையால் உயர்திணையாகாது. ஆயினும் பேடியை யுணர்த்துஞ் சொல்லை உயர்திணைமுப்பாலுள் ஏதாவதொரு பாலில் வைத்துச் சொல்லுக என்று 4ஆவது நூற்பாவிற் கூறுகின்றார்.

"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர் நிலைக்கிளவியும்

... ...

உயர்திணை மருங்கின் பால்பிரிந்திசைக்கும்"

இங்கு உயர்திணையில் இன்னபாலாயிசைக்கும் எனவிரித்துக் கூறப்படவில்லை. அதனால் உயர்திணையில் பெண்பாலாக இசைக்கும் எனக் கொள்வதோடன்றி, ஆண்பாலாக இசைக்கும் எனக் கொள்ளவும் இடமுண்டு. பேடி என்பது பெண் பாலையுணர்த்துஞ் சொல்லாகவருமே யன்றி ஆண்பாலை

யுணர்த்துஞ் சொல்லாகவாரா என்று 12ஆவது நூற்பாவில் வழுக்காக்கின்ருர்.

''ஆண்மை திரிந்த பெயர் நிலைக்கிளவி
ஆண்மை யறிசோற் காகிடனின்றே''

எனவே, பேடி என்பது உயர்திணையில் 'பேடிவந்தாள்' எனப் பெண்பாலையும், 'பேடியர்வந்தார்' எனப் பலர்பாலை யும் குறிக்க வருமே யன்றி 'பேடி வந்தான்' என ஆண் பாலைக் குறிக்கவாராது என்றறிக.

(2) பால்வழுவமைதி

இனி, பால்வழுவமைதியாகத் தொல்காப்பியர் கூறியன வற்றை விரிவாகக் காண்போம்.

ஐயவினுவில் பால் வழுவமைதி

இரவு நேரம். எதிரிலே வருகின்றவர் ஆணு, பெண்ணு என்று அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. ஆனல் இருவரில் ஒருவராகத்தான் இருக்கவேண்டும். ஆதலின் உயர்திணை என்று முடிவு செய்து விடுகின்ருேம். திணையில் முடிவேற்ப டினும் இன்னபால் என்று தெரியாததால் பாலில் ஐயமேற் பட்டுள்ளது. அவ்வமயம் ஐயவாய்பாட்டில் வினு எழுப்பு கின்ருேம். 'ஆணே பெண்ணே' என்று எழுப்பப்படும் அவ் வைய வினுத்தொடருக்கு ஒருமுடிக்குஞ் சொல் தரவேண்டு மல்லவா? அச்சொல் ஆண்பாற் லொல்லாகவிருப்பதா? பெண்பாற் சொல்லாகவிருப்பதா? ''ஆணே பெண்ணே எதிரிலே வருகின்றவன்?'' என்றிருப்பின் பெண்பாலுக்குப் பொருந்தாது. ''வருகின்றவள்'' என்றிருப்பின் ஆண்பாலுக் குப் பொருந்தாது. எனவே இரண்டிற்கும் பொருந்த, 'ஆணே பெண்ணே எதிரிலே வருகின்றவர்' எனப் பலர்பாற் சொல்லாகவிருப்பதே இயைபுடையதாகத் தெரிகின்றது. ஆனல் வருகின்றவர் ஒருவராதலின் பன்மையைக் குறிக்கும்

அர்விகுதியால் முடித்தல் வழுவாயினும் ஏற்றுக்கொள்க எனக் கூறுகின்றூர்,

> ‘பால் மயக் குற்ற ஐயக் கிளவி
> தானறி பொருள் வயின் பன்மைகூறல் (23)

இவ்வாறே அஃறிணை துணிந்து ஒருமை, பன்மைப் பால்களில் ஐயமேற்படின் ''ஒன்றோ பலவோ வயலுள் புகுந்தவை'' என்று பன்மைப்பால் கொண்டு முடிக்க.

இனி, உயர்திணை தெரிவதோடு இச்செயலைச் செய்தவர் ஆண்பால் என்றோ பெண்பால் என்றோ தெரிந்துவிடுகின்றது. நமது பசுக்களைத் திருடியவர் ஆணினத்தவர் என்றும், நமது சோலையில் வண்டல் விளையாடியவர் பெண்ணினத்தவர் என்றும் குறிப்பால் அறிந்துகொள்கின்றோம். ஆனால் அவற்றைச் செய்தவர் ஆணினத்தில் ஒருவரா? பலரா? என்பதும், பெண்ணினத்தில் ஒருவரா? பலரா? என்பதும் தெரியவில்லை. அவ்வமயம் எழுப்பப்படும் ஐயவினைத் தொடருக்கும், பன்மைச் சொல்லையே முடிக்குஞ் சொல்லாகக் கொள்க எனச் சேனுவரையர் கூறுகின்றூர்.

> ''ஒருவனோ பலரோ கறவையுய்த்த கள்வர்''
> ஒருத்தியே பலரோ இக்குருக்கத்தி நீழல் வண்டலயர்ந்தார்

எனப் பன்மையால் முடித்து பால்வழுவமைதியாகக் கொள்க என்கின்றூர்.

இது நூற்பாவில் ‘திணைவயின் எனக்கூறுது, ‘தானறி பொருள்வயின்’ எனப் பொதுப்படக் கூறியதனுல் கொள்ளப்பட்டது.

முன்பு, திணைவழுவமைதி பற்றிக் கூறியவிடத்து ஐயவினைத் தொடர்களைப் பலவழியாக முடிக்குஞ் சொற்கொடுத்து முடிக்கலாம் என்றும் அவற்றுள் ‘உருபு’ என்னுஞ் சொல்லால் முடிப்பது ஒருவழி என்றும் கூறினேம்-

இங்கு மேலே கூறியவாறு அவ்வத்திணையின் பன்மைப் பாற் சொற்கொண்டு முடிப்பதைக் காண்கின்றோம். திணை வழுவமைதிக்குக் கூறிய-உருபு என்னுஞ் சொல்லால் முடிக்கும் அவ்விலக்கணத்தையும் பால்வழுவமைதிக்கும் கொள்க. அஃதாவது, 'ஆணோ பெண்ணோ அங்கே தோன்றுவார்' எனப் பன்மைச் சொல்லால் முடிப்பதோடு, 'ஆணோ பெண்ணோ அங்கே தோன்றுகின்ற உருபு' என்றும் கூறி முடிக்க.

இவ்வாறே அஃறிணையிலும் 'ஒன்றோ பலவோ செய்புக்க உருபு' எனக்கூறி முடிக்க. அஃறிணையில் மற்றொரு வழியாலும் முடிக்கலாம். அஃறிணையில் ஆண், பெண் பகுப்புணர முடியாத சொற்கள் தமிழில் உள்ளன. களிறு என்பது ஆண்பால்; பிடி என்பது பெண்பால்; யானை என்பது அவ்விருபாலுக்கும் பொது. இவ்வாறு பொதுவாக வருவனவற்றை 'அஃறிணைப் பொதுப் பெயர்' என்றுவது, 'பால்பகா வஃறிணைப் பெயர்' என்றுவது கூறுவது மரபு. பெற்றம் என்பது பசு என்னும் பெண்பாலுக்கும், காளை என்னும் ஆண்பாலுக்கும் பொதுச்சொல். அஃறிணையில் தோன்றும் ஐயவினாத்தொடரை இத்தகைய அஃறிணைப் பொதுச்சொல்லால் முடிக்க.

'ஒன்றோ பலவோ செய்புக்க பெற்றம்' எனக்கூறி முடிக்க.

> உருபென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
> இருவீற்று முரித்தே சுட்டுங்காலை (24)

ஐயவினாத் தொடரை முடிக்கும் வழிகள்

உயர்திணையில்:-

1. பன்மைச் சொற்கொண்டு முடித்தல்
2. உருபு என்பது கொண்டு முடித்தல்.

அஃறிணையில்:-

1. பன்மைச் சொற்கொண்டுமுடித்தல்.
2. உருபு என்பது கொண்டு முடித்தல்.
3. அஃறிணைப் பொதுப்பெயர் கொண்டு முடித்தல்.

ஆகியவையே தொல்காப்பியர் கூறுவன.

(தொடரும்)

பொன் மொழிகள்

(மு. வ.)

(இவ்விதழிலிருந்து அறிஞர்களின் பொன் மொழிகள் சில வற்றை வெளியிட எண்ணியுள்ளோம். முதலில் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் நூலிலிருந்து வெளியிடுகின்ருேம். அதற்கு அவர்கள் இசைவு தந் துள்ளார்கள். அவர்கட்கு நன்றி.- பொறுப்பாசிரியர்.)

வெண்ணெய்-நெருப்பு

ஆண்கள் வெண்ணெய் போல. பெண்கள் நெருப்புப் போல. நெருப்பை அணுகியபின் வெண்ணெய் உருகாதிருக்க முடியுமா? ஆகையால் பெண்கள் கணவன்மாரைத் தவிர எந்த ஆண்களுடனும் நெருங்கிப் பழகக் கூடாது.

ஏமாறுவதே-பாவம்

ஏமாற்றுவது பாவம் என்று சொல்கின்ருர்கள். ஏமாந்துகிடப்பதுதான் பாவம். ஒரு கூட்டத்தார் ஏமாந்தால்தான் இன்னெரு கூட்டத்தார் ஏமாற்றுகின்ருர்கள். ஏமாற்றிவாழும் கெட்ட வாழ்வுக்கு இடங்கொடுத்தவர்கள் ஏமாந்த கண்மூடிகளே.

உலகத்து-அஞ்சுவோர்

உலகத்திற்கு அஞ்சுகிறவர்கள் இல்வாழ்க்கையில் தோல்வியடைகிருர்கள். உலகத்திற்கு அஞ்சாதவர்கள் இல்வாழ்க்கையில் வெற்றி பெறுகிருர்கள். உலகமும் வேண்டும். வாழ்க்கையும் வேண்டும். ஆனல் ஒன்று வீட்டுக்கு வெளியே. மற்ருென்று வீட்டுக்கு உள்ளே. வாசற்படிக்கு உள்ளே உலகம் வந்தால் அன்பான மனங்களில் அல்லல் புகுந்துவிடுகின்றது.

தலைவிதி!

என்ன கொடுமை! பாடுபடும் பாட்டாளிக்குப் பட்டினியும் வறுமையும்; பொன்வெள்ளித் தகடு சேர்த்து வைக்கும் ஏய்ப்பாளிக்குப் பெருமையும் புகழும். ஒரு பக்கம் பட்டினி; ஒரு பக்கம் விருந்து. இது தலைவிதி என்பதா? அப்படியானால் அந்தத் தலைவிதியின் தலையைத் தட்டிப் பிளந்து எறிய உழைப்பாளிகள் கையில் சம்மட்டி இல்லையா? அறிவாளிகள் கையில் எழுதுகோல் இல்லையா?

கொடும்போர் நிகழ.....?

ஒரு மனிதன் மற்றொரு மனிதனைத் தன் வழிக்குக் கொண்டுவர முயல்கிறான்; திருத்த முயல்கிறான்; திருத்த முடியாதபோது கொல்ல முயல்கிறான். மனிதத் தன்மையில் வெற்றி கிடைக்காது என்று தெரிந்தவுடனே விலங்குத் தன்மைக்குப் பாய்கிறான். இதனால்தான் அறிவும் திறமையும் வளர்ந்த இக்காலத்திலும் கொடிய போர்கள் நடக்கின்றன.

சொல்லின் செல்வர்

டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல், டி லிட்.

அவர்கள் பிரிவாற்ருமை குறித்துப் பாடிய

கையறு நிலை

[அ. கி. பரந்தாமனுர், M. A.]

1 எஞ்சேது திருமகனே, இனியதமிழ்ப் பெரும்புலவா,
செஞ்சொல்லால் விருந்தளித்துத் தீந்தமிழைக் காத்துவந்தாய்;
இஞ்ஞான்றும் தமிழ்காக்க இருந்திடுவாய் என்றிருந்தோம்;
பஞ்சாக்கிப் பறந்தனையே! பதறுகின்ருேம்! இதுமுறையோ?

2 பொதியமலை இடிந்ததந்தோ! பூஞ்சுனையும் மடிந்ததந்தோ!
சதிபலவும் தடுத்துநின்ற தனிக்காவல் மறைந்ததந்தோ!
பொதியமலை இனியேது? பூஞ்சுனையின் ஊற்றேது?
மதிமிகுந்த எஞ்சேது மாமணியே, பறந்தனையே!

3 தமிழ்மொழிக்கே ஊறுசெயும் தகைமையிலாப் பாவிகளை
இமிழ்கடல்சூழ் உலகினிலே இருக்கவிட்டெஞ் சேதுவினைத்
தமிழினிமை உணராத தன்மையினுல் அந்தகனே,
அமிழ்தினையே கொட்டிவிட்டாய்! அறிவிலையோ உன்றனக்கே?

4 அந்நாளில் சென்னையிலே அருந்தமிழ்நன் ஞட்டினிலே
எந்நாளும் தமிழ்முழக்கி இருந்தமிழை வாழவைத்தாய்;
இந்நாளும் எஞ்சேது, நின்தொண்டு வேண்டிடுங்கால்
கந்தாக விளங்கியநீ காந்தனையே அய்யய்யோ!

5 ஒருசமய வெறியின்றிச் சிறுமதியர் போலின்றி
அருந்தமிழின் பெருநெறிநின் றகலாது தொண்டுசெய்தாய்;
பெருமகனே, எஞ்சேது திருமகனே, பறந்தனையே!
அருங்குணத்தை என்றென்றும் அவனியிலே யாம்மறவோம்!

6 தேடியநின் பொருளினிலே செந்தமிழ்தான் வளர்ச்சியுறக்
கூடியதோர் பெருந்தொகையைக் குறித்தநிதி யாகவைத்தாய்;
நாடியினும் பலசெயவும் நயந்திருந்தாய் என்றிடுவர்;
ஓடியம்மா மறைந்துவிட்டாய் எஞ்சேதாம் உத்தமனே !

7 அண்டிவந்து நெருங்கவொண்ணா அரியதொரு மடற்பனைபோல்
மண்ணுலகில் வாழாமே எஞ்சேது மாமணியே,
அண்டினவர் எவரெனினும் அவர்க்கூக்கம் அளித்துவந்தாய்;
புண்ணியனே, உனைப்போலப் புகன்றிடுவார் யாருளரே !

8 என்றினியாம் பெருமகனே, எஞ்சேது நாவலனே,
புன்முறுவல் பூத்திருக்கும் நன்முகத்தைக் கண்டிடுவம்!
என்றுனது தெள்ளுதமிழ் இன்னுரையைக் கேட்டிடுவம் !
இன்றெமக்குப் பழம்பொருளாய் மாறினையே! என்செய்வோம் !

9 கற்றிருத்தல் மட்டுமன்றிக் கனிவுகொளல் மட்டுமன்றி
உற்றநல்ல பண்பினுக்கும் உறைவிடமாய்த் திகழ்ந்தனையே;
நற்றமிழா, எஞ்சேது நன்மணியே, சொற்செல்வா,
பெற்றதமிழ் நாடென்றும் பெரிதுன்னைப் போற்றிடுமே!

10 அண்மையிலே இருபத்தைந் தாண்டுபணி செய்ததற்கா
நண்ணியதோர் விழாமலரில் நனிவாழ வாழ்த்தியநா
மண்ணைவிட்டு மறைந்ததையும் பாடுநிலை எய்தியதே;
கண்ணனைய எஞ்சேது காவலனே, என்சொல்வேன் !

11 தமிழ்மகள்தான் அரியணையில் தான்புகுந்து விட்டதையும்
தமிழகமென் றோரளவு தமிழ்நிலத்துக் குற்றதையும்
அமிழ்தமென உளங்குளிர அறிந்ததனால் மறைந்தனையோ !
அமலனவன் திருவுளமும் இதுதானோ அறிகிலனே !

12 நெல்லைநகர் தனிற்பிறந்து நல்லிருபல் கலைக்கழகம்
பல்வகையில் போற்றிடவே எஞ்சேது பணிபுரிந்து
நல்லபல தமிழ்க்கடமை நன்றாற்றி நினையடைந்தார்;
அல்லலறுத் தாள்பவனே, அடைந்தவரை ஆண்டருள்வாய்!

[பண்டித அ. முத்துசாமிப்புலவர்]

சிந்தனைச் செல்வர் சிறந்தசொல் வின்செல்வர்
செந்தமிழ்ச் செல்வரெனத் தேயமெலாம் — வந்தனைசெய்
சேதுப் பெயர்படைத்த செம்மலுயிர் வேலனடிப்
போதுக்குள் வாழ்க பொலிந்து.

இவைகள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் 3—5—61-ல் நடந்த இரங்கற் கூட்டத்தின் போது பாடப்பெற்றவை.

மதிப்புரை

நூல்: நம்பியகப் பொருள் விளக்கம்

உரையாசிரியர்: வித்துவான். வ. தங்கையாநாடார்

தலைமைத் தமிழாசிரியர்.

8/4 தேவலோகத்தெரு, பாளையங்கோட்டை.

விலை ரூ. 1—75

தமிழில் அமைந்துள்ள ஐந்திலக்கணங்களுள் அகப்பொருள் என்பது ஒன்று என்பது யாவருமறிந்தது. இதனைத் தொல்காப்பியர் முதலாகப் பல புலவர்கள் விளக்கிப் போந்துள்ளனர். அவர்களுள் 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாற்கவிராச நம்பி என்பார் அகப்பொருளிலக்கணத்தைத் தனியொரு நூலாக நூற்பா வடிவில் அமைத்துச் சென்றனர். இந்நூலுக்குப் பலர் உரை எழுதியிருக்கின்றனர். கல்வெட்டாராய்ச்சியில் தலைசிறந்தவரான வித்துவான் வ. தங்கையாநாடார் என்பார் நூல்வரலாறு, நூலாசிரியர் வரலாறுகளுடன் தெளிவான நடையில் உரையெழுதியுள்ளனர். இவ்வுரை கருத்துரைத்தல், கண்ணழித்துரைத்தல், பொழிப்புத்திரட்டல், அகலங்கூறல் என நான்கு வகையாக விரித்துக் கூறப்பட்டுள்ளது. இந்நூலில் வேண்டுமிடங்களில், விளக்கவுரை அமைவதோடு ஒரோவிடங்களில் தடைவிடைகளும் காணப்படுகின்றன. 36, 116, 139 முதலிய நூற்பாக்களில் வருந்தொடர்களுக்கு எளியமுறையில் பொருள்கூறித் தெளிவுபடுத்தியமை மகிழ்தற்குரியது. இந்நூல் பல்கலைத் தமிழ் வகுப்புகட்குப் பாடமாக விருப்பதால் மாணவர்கட்குப் பெரிதும் பயன்படுவதோடு அகப்பொருளாராய்ச்சி செய்யும் அறிஞர்கட்கும் பேருதவியாய்த் துணைபுரியும் என்பது திண்ணம்.

நூல்:- துறைசைப் புராணம் (வசனம்)

வெளியீடு:- **திருவாவடுதுறை ஆதீனம்**

துறைசை என்னும் பெயர், திருவாவடுதுறையைக் குறிக்கும். இத்தலம் தமிழகத்துச் சிவதலங்களுள் ஒன்று. இத்தலபுராணத்தை எழுதியவர் சாத்திரம்-சாமிநாதமுனிவர் என்பவர். செய்யுள் வடிவில் அவர் அமைத்துப் போந்ததை உரைநடைப் படுத்தித்தந்தவர்-ஞானனந்தா என்பவர். செய்யுளில் அமைந்த நூலைப் படித்துப் புரிந்து கொள்ள முடியாதவர்கட்கு உரைநடையில் அமைந்த இந்நூல் பெரிதும் பயன்படும். இத்தலத்தின் சிறப்புக்களை யறியவிரும்புவோர் இதனை வாங்கிப்படிக்கலாம். நூலின் விலை குறிக்கப் படவில்லை.

நூல்: ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் மாலை

ஆசிரியர்:-

திரிசிரபுரம் மகாவித்துவான் **மீனுட்சிசுந்தரம் பிள்ளை**

வெளியீடு:- **திருவாவடுதுறை ஆதீனம்**

இந்நூல் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது; 101 செய்யுட்களாலானது; மனம் மொழி மெய்கள் மூன்றும் குருபணிவிடைக்கே பயன்பட வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குவது; அகப்பொருட்சுவை ததும்பும் செய்யுட்களையும் தன்னகத்தே கொண்டிலங்குவது. உவமை முதலிய அணிநலன்கள் அமையப் பாடப்பட்ட இந்நூலில் சிவநெறியின் சிறப்புக்கள் பல இடம் பெற்றுள்ளன. நூலினிறுதியில் அரிய சொற்களுக்குக் குறிப்புக்கள் தரப்பெற்றுள்ளன.

நூல்: ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ்

ஆசிரியர்:-

திரிசிரபுரம் மகாவித்துவான் **மீனாட்சிசுந்தரம் பிள்ளை**

வெளியீடு:- **திருவாவடுதுறை ஆதீனம்**

இந்நூல் திருவாவடுதுறை ஆதீனத்துப் பதினேந்தாங் குரவராகிய (கி. பி. 1845-68) ஸ்ரீ அம்பலவாண தேசிகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அமையப்பெற்றது; ஆண்பாற் பிள்ளைத் தமிழிலக்கணம் அமையப் பாடப்பட்டது. இந்நூலில் புராணக் கருத்துக்கள் பல இடம் பெற்றுள்ளன. பிள்ளையவர்களின் கற்பனைப் புலமையை அறிவதற்கு இந்நூல் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. சிறப்பாக அம்புலிப் பருவத்தில் நான்கு உபாயங்களின் மூலம் சந்திரனை அழைக்கும் முறை கற்றோருக்குப் பெருவிருந்தளித்து இன்புறச் செய்யும். இவரது மாணுக்கராகிய தெய்வநாயகம் பிள்ளையின் சிறப்புப்பாயிரத்தோடிலங்கும் இச்செய்யுள் நூலுக்கு இறுதியில் குறிப்புரையும் சேர்க்கப் பெற்றுள்ளன.

பொறுப்பாசிரியர்.

இரங்கற் கூட்டம்

1. சங்கச் செயற்குழு

(1) மதுரைத் தமிழ்ச்சங்கச் செயற்குழு வுறுப்பினரும் வழக்கறிஞருமாகிய ந. இராமசாமிஐயங்கார் அவர்கள் இறைவன் திருவடி நீழலையடைந்த செய்தி கேட்டு வருந்துவதுடன், அன்னார் நமது சங்கத்திற்கு ஆற்றிய தொண்டை இச்சமயத்திற் குறிப்பிட்டுப் பாராட்டி, அவரது குடும்பத்தினருக்கு இக்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

(2) சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பல்லாண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் இறைவன் திருவடிநீழலையடைந்த செய்தி கேட்டு அவரது மறைவினல் தமிழிலக்கியவுலகிற்கு ஏற்பட்ட பேரிழப்பை யெண்ணி மிகவும் வருந்துவதோடு, அவரது குடும்பத்தினருக்கும் இக்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

2. செந்தமிழ்க்கல்லூரி

சென்னைப் பல்கலைக் கழகத்தமிழ்த்துறைத் தலைவரும், பேராசிரியரும், அறிஞருமாகிய டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் இறைவன் திருவடிநீழலை யெய்திய செய்தி கேட்டு, மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்கள் கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழ்ச்சங்கம்
மதுரை.

பொறுப்பாசிரியர்
3-5-61

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கஞநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினாவிடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	—	0	3	0
3?.	மனீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0
72	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4 - 50. தனிப்படியின் விலை காசு 50. இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A, Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.